(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 49.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

## 2010, நவெம்பர் 23, செவ்வாய்க்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0256/ '10

1.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பாந்தோட்டை வலயக் கல்வி அலுவலகத் திற்குட்பட்ட சூரியவெவ கோட்டக் கல்வி அலுவலகத்தினால் நிர்வகிப்படும் அரசாங்க பாடசாலைகளில் கல்வி பெறும் மாணவர்களின் பரீட்சையில் சித்தியடையும் சதவீதம் குறைந்து வருகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கல்வி வலயத்தில் 2007, 2008,2009 ஆம் ஆண்டுகளில் க.பொ.த உயர் தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழக கல்வியைப் பெறுவதற்கு தகுதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையையும் அவர்களது பாடசாலைகளின் பெயர்களையும் தனித்தனியாக அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) வருட ஆரம்பத்தில் பாட புத்தகங்களும் ஆசிரியர்களுக்கான பாடவிதானங்களும் உரிய நேரத்தில் கிடைக்கப்பெறாமை மாணவர்களின் கல்வி நிலை வீழ்ச்சியடை வதற்கு காரணமாயுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்,

(ii) ஆமெனின், அம்மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்துவதற்கும் ஆற்றல்களை வளர்ப்பதற்கும் தேவையான பாட புத்தகங்களை உரிய நேரத்தில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

அவர் இச் சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) மேற்படி பாடசாலைகளை உரிய முறையில் கண்காணிப்பதற்காக உரிய உத்தியோத்தர்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) ஆமெனின், அதற்காக மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் யாவை என்பதையும்

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0437/ '10

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இன்று வரை இயங்கிக்கொண்டிருக்கும் தேசிய மற்றும் மாகாண, பாடசாலைகளின் எண்ணிக்கையையும்,

(ii) மேற்கூறப்பட்ட பாடசாலைகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கையை பாசாலை வாரியாகவும்,

(ii) பாடசாலையொன்றைச் சரியாக இயங்க வைப்பதற்குத் தேவையான ஆசிரியர், மாணவர் விகிதத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) கடந்த இரு வருடங்களில் கல்விக்காக ஏற்பட்ட செலவை வருடவாரியாகவும்,

(ii) அடுத்த வருடத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணத்தொகையையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0537/ '10

3.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், திருகோணமலை - ஹபரனை வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்படடு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல் , வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0567/ '10

4.

கௌரவ நூர்டீன் மசூர்,— தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) புத்தளம் மாவட்டத்தின் தில்லையடி பிரதேசத்தில் அஞ்சல் அலுவலகமொன்று அல்லது உப அஞ்சல் அலுவலகமொன்று இன்மையினால் அப் பிரதேச மக்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனரென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி மக்களின் அஞ்சல் அலுவலக தேவைகளை இலகுவாக நிறைவேற்றிக் கொள்வதற்கு தில்லையடி பிரதேசம் உள்ளடங்கும் வகையில் உப அஞ்சல் அலுவலகமொன்றை தாபிப்பதற்கு தாமதிக்காது நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0569/ '10

5.

கௌரவ அஜித் பி. பெரேரா,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) களுத்துறை மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் அதிகாரப் பிரதேசத்திலும் 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை மற்றும் டெங்கு நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) களுத்துறை மாவட்டத்தில் டெங்கு நோய் தீவிரமாக பரவும் அபாயத்திற்கு முகங்கொடுத்துள்ள பிரதேசங்கள் எவை என்பதையும்,

(ii) அந்தப் பிரதேசங்களில் டெங்கு நோயைத் தடுக்க இதுவரை எடுக்கப்பட்டுள்ள விசேட நடவடிக்கைகள் எவை என்பதையும்,

(iii) இதற்காக எதிர்வரும் நாட்களில் எடுக்கப்படவிருக்கும் விசேட நடவடிக்கைகள் எவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0570/ '10

6.

கௌரவ கரு ஜயசூரிய,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ரத்தொழுகம வீடமைப்புத் தொகுதியில் எஞ்சியுள்ள காணித்துண்டுகளை விற்பனை செய்ய வீடமைப்பு அதிகாரசபையினால் அமுலாக்கப்பட்ட திட்டமொன்று அங்குள்ள வீடு பெறுநர்களால் மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களிடம் செய்த முறைப்பாட்டிற்கிணங்க இடைநிறுத்தப்பட்டதென்பதையும்,

(ii) இது சம்பந்தமாக சனாதிபதி புலமைப்பிரிவு மேற்கொண்ட விசாரணையின் பரிந்துரையை சனாதிபதி செயலாளர் வீடமைப்பு, அபிவிருத்தி அதிகார சபையின் அப்போதைய தலைவருக்கும், வீடமைப்பு, நிர்மானத்துறை அமைச்சின் செயலாளருக்கும் தொர்பு இல. SP/4/2/4/2/1 மற்றும் 2006.02.28 ஆம் திகதிய கடித மூலமாக அறிவித்துள்ளாரென்பதையும்,

(iii) அக்கடிதத்தில் (சுருக்கமாக) "எஞ்சியுள்ள சிறிய காணித்துண்டுகளை கிட்டத்தட்ட 23 வருடகாலமாக அந்த வீடுகளில் வசிப்பவர்கள் அனுபவித்து வந்துள்ளமையால் அவர்களுக்கு விற்பதன் மூலமாக கையளிக்க மேன்மைதங்கிய சனாதிபதியவர்களின் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. சனாதிபதியின் புலனாய்வுத் துறையின் பரிந்துரைக்கிணங்க ரத்தொழுகம வீடமைப்புத் தொகுதியைச் சுற்றி செல்வதற்குள்ள வீதியை காணித்துண்டு 1820 இலிருந்து வேறாக்குவதும் காணித்துண்டு 1819ஐ அண்டிய வீடகளில் வசிப்போருக்கு விற்பனை செய்வதன் மூலமாக கையளிப்பதும் பொருத்தமானதென அறிவிக்கிறேன்." எனக் குறிப்பிடப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேன்மைதங்கிய சனாதிபதியவர்களின் மேற்படி பணிப்புரையை தாமதமின்றி நிறைவேற்ற அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0571/ '10

7.

கௌரவ ருவன் றணதுங்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முப்படை மற்றும் பொலிசில் சேவையாற்றி, பலவீனத்தின் அடிப்படையில் ஓய்வளிக்கப்பட்டு, தற்போது ஓய்வூதியம் பெறும் ஆட்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) இவர்கள் தற்போது பெறும் குறைந்த பட்ச ஓய்வூதியம் எவ்வளவு என்பதையும்,

(iii) கொட்டுகொடை, நதகமுவ, பிட்டவெல வீதியில் 215/பீ இலக்க விலாசத்தில் வசிக்கும் B6511 ஆம் சேவை இலக்கத்தைக் கொண்ட கடற்படையின் பொறியியல் தொழிநுட்ப சேவையில் பணியாற்றி விட்டு 1985.10.30 ஆம் திகதியன்று பலவீனத்தின் அடிப்படையில் ஓய்வளிக்கப்பட்டு தற்போது மனுவங்கொடை பிரதேச செயலகத்தில் ஓய்வூதிய இலக்கம் 3971 இன் கீழ் ரூபா. 6561.20 ஐ ஓய்வூதியமாகப் பெறும், ஈ.எம்.டீ. கீர்த்திசிங்க ஏக்கநாயக்க போன்றோர் எந்த வகைப்படுத்தலுக்குள் உள்ளடக்கப்படுகின்றார்கள் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) திரு. கீர்த்திசிங்கவைப் போன்றோர் பெறும் ஓய்வூதியமானது தற்போதைய வாழ்க்கைச் செலவின்படி போதியதில்ல என்பதனால், இவர்களின் ஓய்வூதித்தை அதிகரிப்பதற்கு அல்லது வாழ்வாதார வழிமுறையொன்றை அமைத்துக் கொள்வதற்கு போதுமானளவு நிவாரணமொன்றை வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0637/ '10

8.

கௌரவ (அல் ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— மரபார்ந்த கைத்தொழில்கள், சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009 ஆம் ஆண்டின் இறுதியின் போது தேசிய கைவினை மன்றத்தின் கீழ் பதிவு செய்திருந்த பல்வேறு கைப்பணி கைத்தொழில் துறைகளில் ஈடுபட்டுள்ளொரின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) இந்நாட்டு கைப்பணிக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளோர் எதிர்கொள்ளும் மூலப்பொருட்களை திரட்டிக் கொள்வதிலும் சிரமத்திற்குப் பிரகாரமாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கைப்பணிக் கைத்தொழிலைச் சேர்ந்த கைவினைஞர்கள் வசமுள்ள அறிவைப் பாதுகாப்பதற்கும் எதிர்கால சந்ததியினருக்கு அதனை உரித்தாக்குவதற்கும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஏதேனுமொரு வேலைத்திட்டமொன்று உண்டா என்பதையும்,

(ii) ஆமெனில், அது யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0257/ '10

9.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பாந்தோட்டை வலயக் கல்வி அலுவலகத் திற்குட்பட்ட அம்பலாந்தோட்டை கோட்டக் கல்வி அலுவலகத்தினால் நிர்வகிப்படும் அரசாங்க பாடசாலைகளில் கல்வி பெறும் மாணவர்களின் பரீட்சையில் சித்தியடையும் சதவீதம் குறைந்து வருகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கல்வி வலயத்தில் 2007, 2008,2009 ஆம் ஆண்டுகளில் க.பொ.த உயர் தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழக கல்வியைப் பெறுவதற்கு தகுதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையையும் அவர்களது பாடசாலைகளின் பெயர்களையும் தனித்தனியாக அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) வருட ஆரம்பத்தில் பாட புத்தகங்களும் ஆசிரியர்களுக்கான பாட விதானங்களும் உரிய நேரத்தில் கிடைக்கப்பெறாமை மாணவர்களின் கல்வி நிலை வீழ்ச்சியடைவதற்கு காரணமாயுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்,

(ii) ஆமெனின், அம்மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்துவதற்கும் ஆற்றல்களை வளர்ப்பதற்கும் தேவையான பாட புத்தகங்களை உரிய நேரத்தில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச் சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) மேற்படி பாடசாலைகளை உரிய முறையில் கண்காணிப்பதற்காக உரிய உத்தியோத்தர்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) ஆமெனின் அதற்காக மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் யாவை என்பதையும்

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0438/ '10

10.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டிலுள்ள கிராம சேவை உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை மாகாண மற்றும் மாவட்ட அடிப்படையில் யாதென்பதையும்,

(ii) அவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் தொகை யாதென்பதையும்,

(iii) அவர்களின் பணிப்பரப்பெல்லை யாவையென்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) (i) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கிராம சேவை உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

(ii) அந்நியமனங்கள் தொடர்பில் பின்பற்றப்பட்ட எடுகோள்கள் யாதென்பதையும்,

(iii) எவ்வாறு தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0538/ '10

11.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், திருகோணமலை - புல்மோட்டை வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்படடு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாது என்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல் , வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0568/ '10

12.

கௌரவ நூர்டீன் மசூர்,— துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) புத்தளம் மாவட்டத்தின் கண்டக்குளிய, பெருங்கடல் கரையோரப் பிரதேசம் அவ்வப்போது துரிதமாக கடல் அரிப்பிற்கு உள்ளாகும் ஒரு பிரதேசம் என்பதையும், இதனால் இப்பிரதேச மீனவர்களின் தரிப்பிடமாகிய மீன்பிடி வாடிகளும் அதற்கருகாமையில் உள்ள வர்த்தகக் கட்டிடங்களும் பாரிய சேதத்திற்கு உள்ளாகின்றதென்பதையும் அவர் அறிவாரா?

(ஆ) இப்பிரதேசத்தில் நிகழும் துரித கடல் அரிப்பினை தடுத்து நிறுத்துவதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய துரித நடவடிக்கைகளை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் மூலமாக தாமதமின்றி மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பாராவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0258/ '10

13.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் தங்காலை வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட தங்காலை கோட்டக் கல்வி அலுவலகத்தினால் நிர்வகிப்படும் அரசாங்க பாடசாலைகளில் கல்வி பெறும் மாணவர்களின் பரீட்சையில் சித்தியடையும் சதவீதம் குறைந்து வருகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கல்வி வலயத்தில் 2007, 2008,2009 ஆம் ஆண்டுகளில் க.பொ.த உயர் தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழக கல்வியைப் பெறுவதற்கு தகுதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையையும் அவர்களது பாடசாலைகளின் பெயர்களையும் தனித்தனியாக அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) வருட ஆரம்பத்தில் பாட புத்தகங்களும் ஆசிரியர்களுக்கான பாட விதானங்களும் உரிய நேரத்தில் கிடைக்கப்பெறாமை மாணவர்களின் கல்வி நிலை வீழ்ச்சியடைவதற்கு காரணமாயுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்,

(ii) ஆமெனின், அம்மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்துவதற்கும் ஆற்றல்களை வளர்ப்பதற்கும் தேவையான பாட புத்தகங்களை உரிய நேரத்தில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

அவர் இச் சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) மேற்படி பாடசாலைகளை உரிய முறையில் கண்காணிப்பதற்காக உரிய உத்தியோத்தர்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) ஆமெனின், அதற்காக மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் யாவை என்பதையும்

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0474/ '10

14.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவுத்துறை, உள்ள வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுகர்வோர் அலுவல்கள் சபையின் உறுப்பினர்களின் பெயர்களையும்,

(ii) கடந்த 3 ஆண்டுகளாக நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையால் நடாத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் எண்ணிக்கையை மாத மற்றும் வருடவாரியாகவும்,

(iii) கடந்த 3 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட மிகவும் முக்கியமானதும் பெறுமதி வாய்ந்ததுமான 10 தேடுதல் நடவடிக்கைகளையும்,

(iv) கண்டுபிடிக்கப்பட்ட குற்றச் செயலின் பெறுமதிகளை மாவட்ட ரீதியாகவும்,

(v) நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையில் பணியாற்றும் அதிகாரிகளின் எண்ணிக்கையையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0539/ '10

15.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், போகஹவெவ – புல்மூட்டை வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்படடு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல் , வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

1.

பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும் தெரிவு:

[6 (2) ஆம் இலக்க நிலையியற் கட்டளை]

## பிரேரணை முன்னறிவித்தல்

2.

கௌரவ (வண) அதுரலிய ரதன தேரர்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

"சமனலகிரி சதராங்க (நாடி) வைத்திய சபையைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2011) — (ஒதுக்கப்பட்ட முதலாம் நாள்) — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2010, நவெம்பர் 22) [1].

* 2.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— நில அளவைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்டத்தின் 41 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 65 ஆம் பிரிவின் கீழ், காணி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு 2005 நவம்பர் மாதம் 23ஆம் திகதிய 1420/20 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட "நில அளவைச் சபை—2005 (வருடாந்த தொழில் புரியும் உத்தரவுப்பத்திரங்கள்)" பிரமாணங்களின் 3 ஆம் பந்தியை திருத்துவதற்காக 2009, திசெம்பர் மாதம் 18 ஆம் திகதிய 1633 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2010.10.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

* 3.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், நிதி, திட்டமிடல் அமைச்சருக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.27 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 27

2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர் சரத் அமுனுகம ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 21302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அச்சிடல், பிரசாரம் மற்றும் புத்தகங்கள் விற்பனை முற்பணக் கணக்கு—கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — *மீளாய்வு செய்யப்படவில்லை.*

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 2,400,000,000 இலிருந்து ரூபா 2,162,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — *மீளாய்வு செய்யப்படவில்லை.*

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா 100,000,000 இலிருந்து ரூபா 960,000,000 வரை.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : கலாநிதி சரத் அமுனுகம*
பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2010.07.03

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்— 2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 6.

சுகாதார அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்—2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 7.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்—2006,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2006.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 8.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை – 2007,— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க இலங்கைக் கட்டளைகள் நிறுவனச் சட்டத்திற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2007 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 9.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆண்டறிக்கை - 2006,— 1994 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்தி சட்டத்தின் 40 (3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 10.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை – 2006,— 2005ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபைச் சட்டத்தின் 29 (5) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 11.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 12.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 13.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 14.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 15.

தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் (திருத்தம்) சட்ட மூலம் - இரண்டாம் மதிப்பீடு.

* 16.

மத்தியஸ்த்த சபைகள் (திருத்தம்) சட்டமூலம் - இரண்டாம் மதிப்பீடு.

17.

தாருண்யட்ட ஹெட்டக் ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] “சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.